# நடந்தபடி தேடுவோம்



M298

# நடந்தபடி தேடுவோம்

கவிதைத் தொகுப்பு

## சமர்ப்பணம்

தாய். தந்தையருக்கு

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

எஸ்.பெருமாள்

நூல்: நடந்தபடி தேடுவோம்
Nadanthapadi Theduvoam
(கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர்: எஸ்.பெருமாள்
(ஈழநாடு பத்திரிகை முன்னாள் ஆசிரியர்)

முகவரி: 13A -1/3, A9 வீதி
அரியாலை, யாழ்ப்பாணம்

பதிப்புரிமை: ஆசிரியருக்கே

முதற்பதிப்பு: மார்கழி 2016

பக்கங்கள்: 9(i - ix) + 65

வடிவமைப்பு: மறுயுகம்
maruyugam@gmail.com
Tel: 0779008448

அச்சுப்பதிப்பு: ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ்
34, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
Tel:021 221 9129
jeyasriprinters82@gmail.com

விலை: 200/-

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANA[illegible]AH
RETIRED VICE PRINCIPAL
ADI[illegible]APATHAM ROAD
KOKUVIL WEST

## பொருளடக்கம்:


| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | |
| என்னுரை | |
| அன்னைத் தமிழே போற்றி | 1 |
| யான் பூசிக்கும் தெய்வம் | 3 |
| மனதில் அமர்ந்து மணம் பரப்பும் தாய் | 5 |
| வணக்கம் வணக்கம் தாயே | 7 |
| அன்னைக்கு இணை ஆர் உளர் | 8 |
| நடந்தபடி தேடுவோம் | 10 |
| உறுதியிருப்பின் வெற்றி வரும் | 11 |
| வெற்றியும் தோல்வியும் | 12 |
| எங்கிருந்து வந்தது இந்த உரிமை? | 14 |
| வேர்விட்ட விருட்சம் | 16 |
| அவனே பார்த்துக் கொள்வான் | 19 |
| பரமனுக்கே வெளிச்சம் | 21 |
| ஒற்றுமையின் வலிமை | 23 |
| கரிச்சான் குருவியின் பாடல் | 32 |
| வாழ்த்துப்பாடும் தவளைகள் | 34 |
| பாலர் கூடினோம் பாட்டு பாடுவோம் | 36 |
| படைப்பவனும் உழைப்பவனும் | 38 |
| பயிலும் பத்திரிகையாளனுக்கு | 48 |
| அன்புள்ளம் | 51 |
| நல்லவரும் பொல்லாதவரும் | 52 |
| காலத்தின் கோலம் | 53 |
| வந்தவர் யார்? | 54 |
| பிஞ்சு கரம் தந்த பஞ்சு சிகிச்சை | 56 |
| அகர வரிசையில் அறிவுரை | 58 |
| கண்ணன் தந்த காட்சி | 61 |
| உலக விசித்திரம் | 63 |
| நல்லதே எண்ணுவம் நல்லதே செய்குவம் | 64 |

# அணிந்துரை

கவிஞர் எஸ்.பெருமாள் எழுதிய "நடந்தபடி தேடுவோம்" என்ற கவிதைத் தொகுதியைக் கண்ணுற்றேன். தமிழ்க் கவிதை பற்றிய எனது நினைவுகள் பின்னோக்கிச் சிறகசைக்கத் தொடங்கின. தமிழ்க் கவிதைக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. ஆனால் ஈழத்துத் தமிழ்க் கவிதையின் தொன்மையைக் கண்டறிவது மிகவும் கடினமானது. ஈழத்துப் பூதந்தேவனாருடன் தொடங்கும் மரபு ஒன்றும் உளது. ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்தவர் எனச் சரியான சான்றாதாரங்களுடன் சுட்டிக்காட்டியவர்கள் இல்லையென்றே சொல்லலாம்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றை ஆய்வு செய்வோர் ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னர்கள் காலத்துடனேயே தொடங்குவர். நான்காம் பண்டித பராக்கிரம மன்னனின் அரசவையில் அரங்கேற்றப்பட்ட சோதிட நூலான "சரசோதிமாலை" தோன்றிய காலப்பகுதியும் ஏறத்தாழ இக்காலப்பகுதிக்குரியதே.

யாழ்ப்பாண மன்னர்களைத் தொடர்ந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என மேலைப்புலத்தினரின் ஆட்சியே இங்கு நடைபெற்றது. ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான கவிதைகள் ஒல்லாந்தர் காலப் பகுதியிலே தோன்றியுள்ளன. ஈழத்துத் தமிழ்க்கவிதையின் பாடுபொருள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே மாற்றம் அடையத் தொடங்குகிறது எனலாம். பாரதியின் வருகையோடு தமிழ்க்கவிதை மரபிலே ஏற்பட்ட "பாய்ச்சல்" ஈழத்துத் தமிழ்க் கவிதையையும் பாதித்தது. அந்தப் பாதிப்பின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளிலே இன்றும் காணலாம். ஈழத்துத் தமிழ்க்கவிதை இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியளவிலே புதிய பரிமாணங்களுடன் பயணிக்கத் தொடங்குகிறது. மகாகவி, முருகையன், நீலாவணன் முதலான பல கவிஞர்கள் இந்தக் காலகட்டத்தின் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர். இந்தப் பின்னணியிலேதான் கவிஞர் எஸ். பெருமாளின் கவிதைகளையும் நோக்க வேண்டும்.

மனிதன் படைத்த கலை வடிவங்களிலே கவிதை (பாட்டு) காலத்தால் முந்தியது என்பர். உள்ளத்து உணர்வுகளை அழகியல் அமிசங்களுடன் வெளிப்படுத்தும்பொழுது (ஓசை உட்பட) அது கவிதையாக (பாட்டாக) மேற்கிளம்புகிறது எனலாம். "உள்ளத்து உள்ளது கவிதை" என்று பாரதி கூறியதையும் இவ்விடத்திலே நினைவு கூரலாம்.

கவிதை தரும் செய்தி அல்லது பொருள் முக்கியமானதுதான். ஆனால் அதைச் சொல்லும் விதம் அதைவிட முக்கியமானது. மொழிவழி கவிதை பிறக்கும். அந்தக் கவிதைக்குச் "சொல்லே" மூலதனம் ஆகின்றது. "மந்திரச் சொல்லின்பம்" என்று பாரதி குறிப்பிட்டதையும் மனங்கொள்ள வேண்டும். "சொல்லை இசைத்து"ச் செய்யப்படும் கவிதையிலேதான் சுவை இருக்கும். கவிஞர் பெருமாளின் கவிதைகளிலே இதனைக் காண முடிகின்றது.

இருபத்தேழு தலைப்புக்களிலே இத்தொகுப்பிற் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடயத்தைப் பேசுகின்றன. பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், ஈழத்துச் சச்சிதானந்தன் முதலான பல கவிஞர்கள் தமிழைத் தாயாகப் பாவித்துக் கவி செய்துள்ளனர். இந்த மரபின் தொடர்ச்சியாகக் கவிஞர் பெருமாளும் தமிழ்த் தாயைப் போற்றிப் பாடுகின்றார்.

"பொங்கிய கடலினால் புவிபல மூழ்கின
மங்கிடாதிருந்ததுன் மகிமையே:,
மழையினால், தீயினால், மாபெரும் காற்றினால்
வெஞ்சினக் கொடியவர் விளைத்திட்ட
சதியினால்..."

எனக் கவிஞர் பாடுவது தமிழ் மொழிக்கு நேர்ந்த இடுக்கண்களைப் பதைபதைப்புடன் கூறுவது போலத் தோன்றுகின்றது.

தமது கவிதைக்கு அவையடக்கம் பாடுவதுபோல அமையும் பாடல் மிகச் சிறப்பாக உள்ளது.

"காப்பு என எதுவும்

நான் அறியேன்
யாப்பு முறைகள் அதும்
படித்தறியேன்
தோப்பில் உலவுகின்ற
காற்றினைப் போல்
மூப்பில் உளறுகிறேன்
முடிவுனதே."

எனத் தன்னையும் தன் கவிதையையும் குறிப்பிடுகின்றார். "தோப்பில் உலவுகின்ற காற்றினைப் போல்" என்ற உவமை புதுவதானதாக அமைந்துள்ளது. பொதுவாக இவரது கவிதைகளிலே சிறப்பான உவமைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. படைப்பவனும், உழைப்பவனும் கவிதையிலே இடம்பெறும் உவமைகள் கவிஞரின் கற்பனைத் திறனைக் காட்டுவதை வகைமாதிரியாகச் சுட்டிக் காட்டலாம். (பக்:38,39,40)

குறியீட்டுப் பாங்கிலே தமது உணர்வுகளைக் கவிதையாகத் தந்திருக்கின்றார். "வெற்றியும் தோல்வியும்" என்னும் கவிதை இதற்கு நல்ல உதாரணமாகும்.

"போர் ஒன்று தொடங்கிற்று...
எனத் தொடங்கி
"இதிகாசத்தில் இராமன் வென்றான்,
புதுயுகத்தில் தலைகீழாயிற்று வெற்றி"

இவ்வாறு இன்னும் சில கவிதைகளிலும் குறியீட்டுப் பாங்கு காணப்படுகின்றது. சமூகச் சிரத்தையுள்ள ஒரு கவிஞனுக்குச் சில வேளைகளிலே ஒரு வகையான தர்மாவேசம் வருவதும் உண்டு. இவரிடமும் ஆங்காங்கே தர்மாவேசம் தலைதூக்குவதைத் தரிசிக்க முடிகின்றது. உதாரணமாக, எங்கிருந்து வந்தது இந்த உரிமை (பக்:) என்ற கவிதையைச் சுட்டிக் காட்டலாம்.

தமிழ் இலக்கியப் பரப்பிலே "நெஞ்சொடு கிளத்தல்" என்று ஒருவகையுண்டு. தன்நெஞ்சுக்குத் தானே சொல்லுவது. நெஞ்சைப் புறவயமாக்கிக் கூறும் பக்திப் பாடல்கள் மிகவும் சிறப்பானவை. "நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா" என்ற தொடர் இந்த வகைக்குப் பொருத்தமான உதாரணமாகும். கவிஞர் பல்வேறு இடங்களிலும் இந்த முறைமையைக்

கையாண்டுள்ளார்.

பழுத்த அனுபவத்தின் வெளியீடாக உணர்வுடன் வரும் சொற்களை அழகுற அடுக்கிவைத்துள்ளார். இவரது கவிதைகளிலே, இவரின் அனுபவம், இவர் கண்ட காட்சிகள், இவர் எண்ணியவை, காண ஆசைப்பட்டவை போன்ற பல்வேறு விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

கவிஞரின் சமய நம்பிக்கை, சமூக எதிர்பார்ப்பு முதலானவற்றோடு உளவியலும் மொழியியலும் சங்கமித்திருப்பதைப் பல கவிதைகளிலே காண முடிகின்றது. இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளிலே படைப்பவனும் உழைப்பவனும் என்ற கவிதையை விதந்து குறிப்பிட வேண்டும். இவரது அனுபவம் கலந்த கற்பனையாக இது இருக்க வேண்டும். கவிஞர் தாம் கருதியதைப் பூடகமாகச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய விதத்திலே ஒரு கலைத்துவத்தைக் காணுகிறோம்.

இவ்வாறே இவரது பல கவிதைகள் சொல்லிய விதத்தால் சுவை தருகின்றன. கூர்ந்த அவதானிப்பு ஒரு கலைஞனுக்கு வேண்டும் என்று சொல்லுவார்கள்

"இணையை அழைக்கும் ஒரு குரலில்
இரையைக் கண்டால் வேறு குரல்
குஞ்சை அணைக்கும் ஒரு குரலில்
குதூகலமானால் வேறு குரல்" (பக்:..)

பறவைகள், மிருகங்களின் "ஒலி" பற்றி ஆய்வு செய்தவர்கள் கூறும் கருத்தினைத் தமது அனுபவத்தினூடாக அழகாகப் பதிவு செய்துள்ளார்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றிலே குழந்தைப் பாடல்களுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு. இத்தொகுப்பிலே இடம்பெறும் வாழ்த்துப்பாடும் தவளைகள் என்ற பாடல் சிறப்பான குழந்தைப்பாடல் ஆகும். இவர் குழந்தைப் பாடல்களை எழுதி வெளியிட வேண்டும் என்பது எமது விருப்பமாகும். குழந்தைகள் குதூகலத்துடன் பாடியாடும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களிலே நிறைய உண்டு. இன்று நாட்டுப்புற வாழ்க்கையைத் தொலைத்த

சூழ்நிலையிலே இத்தகைய பாடல்கள் மிகவும் முக்கியமானவை.

இவரது கவித்துவ ஆற்றலை இத்தொகுப்புச் சிறப்பாகப் புலப்படுத்தி நிற்கிறது. "பிஞ்சுக்கரம் தந்த பஞ்சுச் சிகிச்சை" இவரது சொந்த அனுபவமாக இருக்க வேண்டும். எம்போன்ற பலருக்கும் இது நூறுவீதம் பொருந்தும். "மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்" என வரும் குறளைப் படித்திருக்கிறோம். ஆனால் மக்களின் மக்கள் தீண்டுவதில் வரும் இன்பத்தைக் கவிஞர்கள் பலர் சொல்லவில்லை. ஆனால் இவர் சுவைபடச் சொல்லி இருக்கிறார்.

மொத்தத்தில் இத்தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகள் யாவும் உள்ளத்தில் உறைபவை. வெறுமனே வசனங்களையே கவிதை என்று கூறும் இன்றைய காலகட்டத்திலே ஒருவித ஓசை ஒழுங்குடன் பொருத்தமான சொற்களைப் பொருத்தமுறக் கோர்த்துச் சமூகத்துக்கும் தனிமனிதனுக்கும் தேவையான பலவற்றைக் கவிஞர் இத்தொகுப்பிலே தந்திருக்கிறார். அவர் தொடர்ந்து கவிதைப் பயணத்தைத் தொடர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# என்னுரை

இலக்கண மரபுகளை மீறி அல்லது புதிய முறைகளில் இக்காலத்தில் தமிழில் கவிதைகள் படைக்கப்படுகின்றன. அதனை தமிழ்கூறும் நல்லுலகம் இன்று ஏற்றுக்கொண்டுள்ளது என்பதும் யதார்த்தம். இருந்தாலும் தமிழ் இலக்கண முறைகளைப் பின்பற்றி மரபுக் கவிதைகளை இயற்றுகின்ற கவிஞர்களும் குறைந்து போய்விடவில்லை. அவர்களுக்கு எக்காலத்திலும் தமிழ் அறிஞர்கள் மத்தியில் சிறப்பானதோர் இடம் இருக்கவே செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்பது நம்முன்னோர் வாக்கு. காலங்கள் மாறி, கருத்துகள் மாறி கவிதை பாடும் முறைகளும் மாறியிருப்பதானது தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் தவிர்க்கமுடியாத அணிகலன்களாக காணப்படுகின்றன. அந்தவகையில் உருவாகியிருப்பவைகளே புதுக்கவிதை, வசன கவிதை, நவ கவிதை என்பவையெல்லாம். இவைகளுக்கு வரைவிலக்கணம் ஒன்றும் கிடையாது. தடைகளற்ற, அல்லது கட்டுப்பாடற்ற முறையில் எழுதப்படுபவையாகும். Free style என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

எதுவானாலும் இவ்வாறான கவிதைகளை எழுதுபவர் தனக்கென ஒரு நடையை உருவாக்கிக் கொண்டு அதன் வழியில் தனது எண்ணங்களை அழகாகவும் நளினமாகவும் சொல்லும்போது அதுவே ஒரு புதுப்பாணியாக மலர்ந்துவிடுகின்றது. அதனை நுகர்வோரும் புதியதோர் அனுபவத்தைப் பெறுகிறார்கள். சிலசமயம் உள்ளக் கிளர்ச்சிக்கும் ஆட்படுகிறார்கள். ஒருகாலத்தில் மல்லிகை போன்ற சிலவகை மலர்ச் செடிகளை மட்டுமே வீட்டுத் தோட்டங்களில் மக்கள் வளர்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் வனங்களில் அநாயாசமாக வளர்ந்து பூத்துக் குலுங்கிய செடிகளையும் வீடுகளில் மட்டுமின்றி கோயில் தோட்டங்களிலும் வளர்க்கலானார்கள். இவைகளில் காணப்பட்ட மணம் மற்றும் அழகு போன்ற அம்சங்களே அதற்குக் காரணமாக அமைந்தன. எல்லாவித பூக்களையும் எல்லாவித

காரியங்களுக்கும் நம்மவர்கள் பயன்படுத்துவதில்லை. அதனால் மற்றவையெல்லாம் மலர்கள் அல்லவென்று ஆகிவிடாது. நாம் பார்க்கும் நுகரும் முறையில்தான் அவைகளின் சிறப்பு வெளிப்படுகின்றது.

இந்தத் தொகுப்பில் அவ்வப்போது நான் எழுதிவைத்திருந்த ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அவைகள் அனைத்தும் என்னைப் பொறுத்தவரை கவிதைவடிவங்களே. அவைகளில் நான் சொல்ல முயன்றுள்ளவை சிலருக்கு தெளிவில்லாமலும் சிலருக்கு பளிச்சென புரிபவையாகவும் இருக்கலாம். எனது அனுபவம், பார்வை, மொழிப் பயிற்சி, கிரகிப்பு போன்ற பண்புகளின் வெளிப்பாடாக இவை அமைந்துள்ளன. இவை அனைத்தும் எனது சொந்த ஆக்கங்கள் என்பதை அறுதியிட்டு கூறிகொள்கின்றேன்.

இச்சிறிய தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கி உதவுமாறு நான் கேட்டபோது எதுவித தயக்கமும் இன்றி மகிழ்வுடன் ஒப்புக்கொண்டு எழுதி வழங்கிய பெருமகன் பேராசிரியர் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூல் சிறப்புடன் வெளிவருவதற்கு கணனிபடுத்தல் உட்பட பல்வேறு வகையிலும் சிரமம் பாராது உதவி புரிந்த மறுயுகம் வெளியீட்டகத்திற்கும் எனது நன்றிகள் உரித்தாகும். நூலினை சிறப்புற பதிப்பித்து உதவிய ஜெயஸ்ரீ பிரிண்டேர்ஸ் அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள். வேறுவகையில் உதவிகள் புரிந்த அனைவரும் எனது நன்றிக்குரியவர்கள்.

எஸ்.பெருமாள்
ஈழநாடு பத்திரிகை
முன்னாள் ஆசிரியர்

13A -1/3, A9 வீதி
அரியாலை
யாழ்ப்பாணம்
10.12..2016

# அன்னைத் தமிழே போற்றி!

*ஆதித் தமிழே உன் அடி போற்றி*
*அன்னைத் தமிழே உன் புகழ் போற்றி*
*சோதியாய் நின்றெமக்குத் துணைவரும்*
*தூயவடிவே, போற்றி! போற்றி!*

*ஆதிமுதல்வனால் ஆனவள் நீ என*
*அறிஞர்கள் கூறுவர், ஆதலினால்உனை*
*அகத்தினில் இருத்தியே அனுதினம்*
*வணங்குவோம், போற்றி! போற்றி!*

*சாதல் என்பதே சாத்தியம் இலை என*
*மாதவ மேதைகள் சாற்றுவர் ஆதலின்*
*காதல் மிகையுறக் களிப்புடன்*
*போற்றுவம்*
*போற்றி! போற்றி!*

*பொங்கிய கடலினால் புவிபல மூழ்கின*
*மங்கிடாதிருந்ததுன் மகிமையே!*
*மழையினால், தீயினால், மாபெரும்*
*காற்றினால்*
*வெஞ்சினக் கொடியவர் விளைத்திட்ட*
*சதியினால்*
*அஞ்சியதில்லை நீ, அனைத்திலும்*
*வென்றனை,*
*எத்தனை சோதனை இனிவர நேரினும்*

*அத்தனையும் எதிர்கொண்டு நீ மீளுவை*
*ஆதலினால் தினம் உனை*
*போற்றுவம்*
*போற்றி! போற்றி!*

*நீலவானமும் நீள்தரை பூமியும்*
*ஆழக்கடலதும் அனைத்துக் கோள்களும்*
*அழிந்தேபோகினும் அடியோடு மாறினும்*
*அழியாதிருந்து நீ உயிர்த்து மீளுவை*
*ஆதலினால் உனை தினம்*
*போற்றுவம்*
*போற்றி! போற்றி!*

# யான் பூசிக்கும் தெய்வம்

*தமிழ் என் தாய்மொழி,*
*தாய் தந்த மொழி*
*தாயும் தந்தையும்*
*தனித்தே இருந்து*
*பேசிய மொழி - அவர்*
*பேசிய நிகழ்வில்*
*பிறந்த மொழி,*
*பிறந்த குழவியின்*
*மழலை மொழி,*
*மழலையின் வாயில்*
*மகிழ்ந்த மொழி,*
*இனிதே எழுந்து*
*நடந்த மொழி,*
*இளமையும் எழிலும்*
*இணைந்திட...*
*வனப்பாய்*
*வளர்ந்த மொழி,*
*வாழும் மொழி,*
*வாழ்வு தருமொழி,*
*வாழத்துடிப்போர்க்கு*
*வழிகாட்டும் மொழி,*
*தென்மொழி,*
*தேன்மொழி,*
*தெளிவு தருமொழி,*
*கண்மொழி,*

கலைகளுக்கு முன்மொழி,
பன்மொழி,
பல மொழிகளுக்கு
தாய்மொழி,
செம்மொழி,
செகத்தோர் யாரும்
சிறப்புடன்
செப்பு மொழி,
பொன்மொழி - யான்
பூசிக்கும் தெய்வமாய்
போற்றுமொழி

# மனதில் அமர்ந்து மணம் பரப்பும் தாய்

*மனம் எனும் கோயில்தனில்*
*வீற்றிருப்பாய் - அங்கு*
*மலராய் விரிந்து மணம்*
*பரப்பிடுவாய்*

*தமிழே என் தாயே*
*தலைவணக்கம்*
*தரணியில் வேறெவரும்*
*சதம் இலைகாண்*

*பாட்டு எழுதவென*
*பதம் பிடித்தேன் - நான்*
*ஏட்டில் படித்தவைகள்*
*இலை அதிகம்*
*கேட்டு அறிந்தவற்றில்*
*கிறுக்குகிறேன்*
*மோட்டு மனிதன் என்றன்*
*மொழி நடையில்*
*தீட்டும் கவிதை இது*
*மீட்டுகவே*

*அத்தி மலர்வதில்லை - ஆனால்*
*கனி உதிர்க்கும்*
*கத்தி மழுங்கிவிடில்*
*பயன் கிடையாது*
*புத்தி சுருங்கிவிடின்*
*புலமை அறும்*
*சித்திபெறும் வழி உனை*

சிரமேற் கொண்டேன்
நத்தி வந்தேன் தாயே
நாளும் துணை
காப்பு என எதுவும்
நான் அறியேன்
யாப்பு முறைகள் அதும்
படித்தறியேன்
தோப்பில் உலவுகின்ற
காற்றினைப் போல்
மூப்பில் உளறுகிறேன்
முடிவுனதே
கல்லை செதுக்குவது
கலைஞன் வேலை
சொல்லை விளக்குவது
அறிஞன் வேலை
வில்லை வளைத்திடுதல்
வீரன் வேலை
நெல்லை விளைத்திடுதல்
உழவன் வேலை
எல்லை கிடையாது - எனக்கு
கவிதை வேலை

## வணக்கம் வணக்கம் தாயே

*வணக்கம் வணக்கம் தாயே எம்*
*வாழ்வின் மூச்சு நீயே*
*கருணை மழைதனைப் பொழிவாயே*
*காலமெலாம் உடன் வருவாயே*
*வணக்கம் வணக்கம் தாயே*

*நாக்கில் நடமிடும் நாயகியே - என்*
*வாக்கில் திகழ்ந்திடும் தேவகியே*
*காக்கும் கடவுள் நீயே*
*கைதொழுதேன் தாயே*
*வணக்கம் வணக்கம் தாயே!*

*அம்மா என்றே சிலர்*
*அழுதிடுவார்*
*அன்னையே என்றும் சிலர்*
*அழைத்திடுவார்*
*தாயே என்றும் சிலர்*
*விளித்திடுவார்*
*மாதாவென்றும் சிலர்*
*மருவிடுவார்*
*ஏதாய் இருந்தாலும் நீ*
*எனக்கு ஒன்றே - உன்*
*ஆதாரம் இருப்பின் - இவ்*
*உலகை வெல்வேன்*
*வணக்கம் வணக்கம் தாயே*

# அன்னைக்கு இணை ஆர் உளர்

அன்பினை சொரிந்தெமை
அணைப்பவர் எவரிலும்
உயர்ந்தவர் எவர் என
உரைகென கேட்பிரேல்
உண்மையில் அன்னைக்கு
இணையிலை என்பன் யான்
ஏனெனில்,
கள்வனே யாகினும்
கடைகெட்ட
மூடனேயாகினும் யான்
அடிபட்டுக்கிடப்பனேல்
அங்கவள் காண்கினில்
உயிரினைத் துச்சமாய்
உதறியே வந்து என்
உடலினை ஏந்துவள்
உளதுயிர் என்றிலோ
உரிமையாய் நிற்பளே
துடிதுடித்துயிர் தொடர்தர
வைப்பளே! அங்ஙனம்
அவளைப்போல் ஆர் உளர்
உருகவே!
ஆகவேதான் அவள்
ஆருயிர் ஆகிறாள்
பேசவும் கேட்கவும்
பிழைபடா(து) நடக்கவும்

*பயிற்சிகள் தந்தவர்*
*பகிர்வினோா. யாரெனில்*
*அன்னையே அவர் என*
*ஆயிரம் தடவையும்*
*அடித்துநான் கூறுவேன்*

# நடந்தபடி தேடுவோம்

நான் நடக்கிறேன் என்
நடையின் எல்லை
வெகுதூரம்!
அது தெரிந்திருந்தும் நடக்கிறேன்
பாதை கரடுமுரடானதுதான்
ஆனால் நடந்துதானாக வேண்டும்
தொடங்கியாகிவிட்டது
இனி தயங்குவதில் நியாயமில்லை
அதோ தூரத்தில் தெரிவது
விடிவெள்ளியா? அது
சுரங்கப்பாதையின் அடுத்த முனையா?
அங்குதான் எமது முன்னோர்களும்
சென்றதாகக் கேள்வி,
நீங்களும் வாருங்கள் உங்கள்
முன்னோர் சென்ற தடயங்களும்
கிடைக்கலாம், அங்கு
நடந்தபடி தேடுவோம்
தேடியபடி நடப்போம்
தேடலின் முடிவு ஒருநாள்
நிச்சயம் தெரியவரும்
அது சொர்க்கமாகவும் இருக்கலாம்!

# உறுதியிருப்பின்
# வெற்றிவரும்

மேகத் தொடரின் ஊர்வலம்
மெதுமெதுவாகவே நடக்கிறது
போகுமிடமோ வெகுதூரம்
போய்ச்சேர்ந்தாலே பெருங்காரியம்
காற்று வந்து மேகமதை
கலைத்துவிடலாம், மற்றும் பல
மோட்டு மனிதர் செய்கையினால்
முறிந்துவிடலாம் முயற்சியெலாம்
தோற்றம் பலவாய் இருந்தாலும்
தொடர்ந்து பயணம் நகர்ந்தாலும்
உற்ற இடத்தை அடைவதிலே
உறுதி இருப்பின் வெற்றி வரும்

# வெற்றியும் தோல்வியும்

போர் ஒன்று தொடங்கிற்று
புறப்பட்டார்கள் புனிதராமனும்
புடைசூழ் போராளிப் படைகளும்
என்ன நேர்ந்தது?
இலட்சுமணன் வேறு ஒரு திசையில்
பரதன் சத்துருக்கன்கள் மட்டுமல்ல
அனுமார் சுக்ரீவர்களும்
வெவ்வேறு திசைகளில்!
இணைந்து நின்று எதிரியை
எதிர்கொள்ள முடியாமல் போனமை ஏனோ?
பலமெல்லாம் பாழாகிப் போனதே
சகோதரர்களுக்குள்ளேயே சண்டை
அடிபட்டுக் கொண்டவர்கள்
அங்கேயும்! இங்கேயும்!
இடையில் நழுவி
கிடைத்ததைச் சுருட்டி
கீழ்மக்களானவர்களும் உண்டு

வானில் வந்து பார்த்தான்
இராவணன், மகிழ்ந்துபோனான்
இதுதான் தக்க தருணம் என்று
கண்டு எக்காளமிட்டுச் சிரித்தான்
அதிர்ந்தது பூமி, அனலைக் கக்கியது வானம்
ஆயிரக் கணக்கில்
அப்பாவி மக்கள் அழிந்தார்கள்

*குற்றுயிரும் குலையுயிருமாய்*
*ஓடித் தப்பிய ஆயிரக்கணக்கானோர்*
*காணாமல் போனார்கள்*
*இதிகாசத்தில் ராமன் வென்றான்*
*புதுயுகத்தில் தலைகீழாயிற்று வெற்றி*

# எங்கிருந்து வந்தது இந்த உரிமை?

வாழப் பிறந்தவனைக்
கோழைத்தனமாக
கொல்ல முனையாதே
கொள்ளுப் பாட்டியை
எளிய பாட்டாளியை
விட்டிலைப் போல் எண்ணி
வீழ்த்த முனையாதே
துப்பாக்கி முனைக்கு மட்டும்
பேசும் திறனிருந்தால்
தப்பான உன்செயலை
தடுத்தே நிறுத்திவிடும்
சிங்கத்தை நீ கொன்றால்,
சீறி வருகின்ற
நாகத்தைக் கொன்றால்,
வேழத்தை வென்றால்,
விடுதலைக்காய்
வீறுடன் நின்றால், வீரன்
இவன் என்று
வியந்திடலாம்
பூமாரி சொரிந்து போற்றிடலாம்
ஆனால், நீயோ
கொலை கொலையென அல்லவா
கொக்கரிக்கின்றாய்
கொழுந்தான குஞ்சுகளை
பஞ்சாகப் பதறடிக்கின்றாய்

*இறப்பவனை மீண்டும்*
*பிறக்க வைக்க*
*உன்னால் முடியுமா?*
*பிறந்தவனை*
*இறக்க வைக்க மட்டும்*
*உனக்கு*
*எங்கிருந்து வந்தது உரிமை?*
*ஆக்கும் ஆற்றல்*
*இல்லா உனக்கு*
*அழிக்கும் உரிமை மட்டும்*
*எங்கிருந்து வந்தது?*
*சொல்!*

# வேர்விட்ட
# விருட்சம்

*நல்ல நண்பர்கள்*
*ஒரு சிலரே...*
*இருக்கிறார்கள் - என்று*
*இதுவரை*
*நினைத்துக்கொண்டு*
*இருந்துவிட்டேன் நான்!*
*எவ்வளவு பெரிய*
*இமாலயத் தவறு.*
*என்னைப் பற்றியே*
*எப்பொழுதும்*
*சிந்திப்பவர்கள்*
*எத்தனைபேர்*
*இருந்துள்ளார்கள்*
*காலைவாரி விடுவதற்கு.*
*விமர்சித்து மகிழ்வதற்கு.*
*வீழ்த்திவிட்டு*
*அந்த இடத்தில்*
*அமர்ந்து கொள்வதற்கு.*
*அல்லது விரும்பியவரை*
*அமர்த்தி விடுவதற்கு.*
*என் வீழ்ச்சியில்*
*எக்காளமிட்டு*
*ஏளனமாய் சிரிப்பதற்கு.*
*எத்தனைபேர்*
*இருந்தார்கள்*

இப்போதுதான் தெரிகிறது!
என்மீது இத்தனை
கரிசனை கொண்டவர்கள்
இருந்துள்ளார்கள் என்பது - இவர்களை
நண்பர்கள் என்று நவிலாமல்
வேறு எவ்வாறு அழைப்பதுவாம்
ஆனால்
அந்த நண்பர்கள்
எல்லோரும் எங்கே
போனார்கள் இப்போது?
எனக்கே ஆச்சரியமாக
இருக்கிறது
அவர்களில் பல பேர்
இப்போது ஊரில் இல்லை
இன்னும் சிலர்
உயிருடன் இல்லை
மற்றவர்களும்
அமைதிக்குள் ஆழ்ந்துவிட்டார்கள்
அவர்கள் எல்லோரும்
பெருமை (அல்லது பொறாமை)
கொள்ளும் அளவுக்கு
இப்போது நான்
எந்தவொரு
நிலையிலும் இல்லை,
என்னை,
வீழ்த்த வேண்டிய
அவசியம்
அவர்களுக்குமில்லை
அவர்கள் வீழ்த்த
எத்தனித்தாலும்
வீழும் நிலையில்
நானும் இல்லை

*ஏனென்றால்*
*நான் ஒரு*
*வேர் விட்ட விருட்சம்*
*என் ஆணிவேரை*
*அடையாளம்*
*காணவே*
*வெகுகாலம் பிடிக்கும்*
*அவர்களுக்கு*

# அவனே பார்த்துக்கொள்வான்

உன்தாயைப் போலத்தான்
என் தாயும்
என்னைப் பெற்றெடுத்தாள்
பத்துமாதம் சுமந்திருந்து,
பாலூட்டினாள், பயிற்சிதந்தாள்
பேசப் பழக்கினாள்
உன் தந்தையைப் போலவே
என் தந்தையும் என்னை
வளர்த்தார், படிக்க வைத்தார்
இருவரும் சேர்ந்து என்னை
பெரியவனாக்கினார்கள்
உனக்கும் தலை, கண்
காது, மூக்கு, வாய் மற்றும்
கைகால்கள் இருப்பதுபோல்
எனக்கும் இருக்கின்றன
உன் இரத்தம் சிவப்பு
என் இரத்தம் என்ன
பச்சையாகவா இருக்கின்றது?
ஆக நீ பேசும் மொழியும்
உன் சமயமும் அத்துடன்
நீ உன் கலைகளாகப்
பயின்று கொண்டுள்ளவையும்
உன் கலாசாரமும்
என்னுடன் மாறுபடுகின்றன

இவை நாம் வளர்ந்தபின்
எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையே
உலகத்தையும் உலக
உயிர்களையும் உன்னையும்
என்னையும் கூட இறைவன்தான்
படைத்தான் என்றால்
எம்மை அழித்துவிடுவது
அவன் விரும்பாத மனிதர்களை
மதங்களை, இனங்களை
ஏன் மொழிகளையும் கூட
ஒரு கணப்பொழுதில்
அழித்துவிடுவது அவனுக்கொரு
பெரிய காரியமன்று
அதைச் செய்யாதிருப்பதற்குக்
காரணம் அவனுக்கே தெரியும்
அதை நீயும் செய்ய வேண்டாம்
நானும் செய்ய வேண்டாம்
அவைகளை அவனே
பார்த்துக்கொள்வான்
அவை அவனுக்குரியவை

# பரமனுக்கே வெளிச்சம்

*பிடித்தார்கள் அடித்தார்கள்*
*விடுத்தார்கள் - பிறகு*
*அடித்தார்கள் பிடித்தார்கள்*
*விடுத்துச் சென்றார்கள்*
*பிடித்தவரும் அடித்தவரும்*
*விடுத்த செய்தி*
*விளங்குதற்கு முடியவில்லை*
*விளம்பாய் நெஞ்சே!*

*வந்தார்கள் சொன்னார்கள்*
*போய்விட்டார்கள்*
*போனார்கள் சொன்னார்கள்*
*மீண்டும் வந்தார்*
*வந்தவரும் போனவரும்*
*வழங்கும் செய்தி*
*வழவழப்பாய் போனதென*
*வழங்காய் நெஞ்சே*

*எடுத்தார்கள் மறுபடியும்*
*கொடுத்தார்கள்*
*கொடுத்தவற்றை எடுத்தார்கள்*
*எடுத்தவற்றை*
*கொடுத்தார்கள்*
*எடுத்தவரும் கொடுத்தவரும்*
*இயம்பும் செய்தி - இங்கு*

எவருக்குமே வெளிச்சமில்லை
இயம்பாய் நெஞ்சே

ஆடினார்கள் பாடினார்கள்
அரவமின்றி
கூடினார்கள் கிசுகிசுத்து
மூடினார்கள்
கூடியதும் மூடியதும் கூறக்கேட்கின்
குலைநடுங்கும் சங்கதியாம்
கூறாய் நெஞ்சே

பறந்தார்கள் இறந்தார்கள்
இறந்தார்கள் பறந்தார்கள்
மீண்டும் மீண்டும் பறந்தார்கள்
மீண்டும் மீண்டும் இறந்தார்கள்
பறந்தவரும் இறந்தவரும்
பகர்ந்த செய்தி அந்தப்
பரமனுக்கே வெளிச்சமென
பகர்வாய் நெஞ்சே

# ஒற்றுமையின் வலிமை

குட்டி எலியொன்று குதித்தோடிவந்தது
குளிர்தீர வெயிலில் குந்தி மகிழ்ந்தது
வளைக்கு வெளியிலே வண்ண
உலகொன்று
இருக்கின்ற விந்தையை எண்ணி
வியந்தது

### பூனை வந்தது

பூனையொன்று வந்தது
எலிப்பிள்ளையைக் கண்டது
என்னதம்பி செய்கிறாய் என்று மெல்ல
கேட்டது
ஒன்றுமில்லை அண்ணைநான்
ஒளியைக் கண்டு வியக்கிறேன்
வளைக்குள்ளிருந்து வந்ததால் வியர்த்து
மேனி களைக்குது
என்று கூறி எலியது இயற்கை அழகை
இரசிக்குமாம்

### பூனையின் கபடம்

பதுங்கி பதுங்கி நகர்ந்த பூனை
பக்குவமாய் நிமிர்ந்தது
ஒதுங்கிநின்ற எலியின்மீது
எகிறிக் கொண்டு பாய்ந்தது
பாயும்பூனை தன்னைக்கண்டு

பதறிப்போன எலிக்குஞ்சு
அலறிக்கொண்டு வளைக்குள் தாவி
அந்தோ, தப்பிக் கொண்டது

**குறி தப்பிய பூனை**

குறியில் தப்பிப்போன பூனை
குமுறிக்கொண்டு கூறுமாம்
வருவாய்தானே மீண்டும் இங்கு
வழியிருப்பதிங்கையே
வாயில் தன்னில் காத்திருந்து
வளைத்துப் பிடிக்கமாட்டேனோ
என்று கூறி பூனைப் பிள்ளை
இருந்து காவல் காத்திடும்

**தாய் எலியிடம்**
**குட்டி எலி கூறிய விபரம்**

பதறியடித்து பாய்ந்து ஓடி
வளைக்குள் புகுந்த எலிக்குஞ்சு
குளறிக்கொண்டு தாயின் முன்னே
நடுங்கிக்கொண்டு நின்றது

எங்கு சென்றாய் என்ன செய்தாய்
ஏன்தான் இந்த நடுக்கமாம்?
என்று கேட்ட தாயைப் பார்த்து
எடுத்தியம்பும் எலிக்குஞ்சு

வெளியில் சென்று அம்மா நானும்
வெளிச்சம் பார்க்க விரும்பினேன்
பச்சை மரங்கள், பாடும் பறவை
பாய்ந்து வீழும் அருவிகள்
மேயும் மாடு, கூவும் சேவல்
வானில் மேகம் நகருமே
அதற்கும் அப்பால் ஒளியை வீசி
ஒளித்துநிற்கும் சூரியன்

அழகு கொஞ்சும் இயற்கைதன்னை
ஆசைதீர பார்த்தனன்
அந்தநேரம் அங்கு மெல்ல
அடிஎடுத்து வைத்ததோர்
விந்தையான விலங்கு என்னை
விதிர்விதிர்க்க வைத்ததே!
உருண்டையான கண்களாலே
உருட்டி மிரட்டி பார்த்தது
நண்பன் போல நளினம் காட்டி
நாக்கை சப்பிக் கொண்டது
நாலு கால்கள் வாலுமுண்டு
நல்ல உருண்டை உருப்படி
மீசையுண்டு மிடுக்குமுண்டு
மினுமினுக்கும் மேனியன்
கள்ளப் பார்வை வீசும் நோக்கம்
கண்டு கொண்ட நானுமே
துள்ளிப் பாய்ந்து ஓடிவந்தேன்
துடிதுடிக்கும் நெஞ்சமே

**தாய் எலியின் கவலை**

குஞ்சு எலி கூறிய குலை நடுங்கும்
சேதிகேட்டு தாய் எலி கூறும்...
எம்மவர்க்கு எதிரிகள்
எங்குமுண்டு நாட்டிலே
பூனை என்ற பாவிகள்
புரியும் கேடு அதிகமே
எந்தன் தாயும் தந்தையும்
இறப்பதற்குக் காரணம்
இந்தப்பாவி பூனைதான்
என்னசெய்வம் தெய்வமே!

**அப்பன் எலியின் கவலை**

அந்த நேரம் அங்கு வந்த

அப்பன் எலி கூறுமாம்
பூனைக் கொடுமை ஒழிய வேண்டும்
புதுசாய் வழி யொன்று
பிறக்க வேண்டும்
பூனைக்கு மணிகட்ட முடியாது - அதைப்
புரியவும் எவருமே துணியார்கள்
ஆனைக்கு மணிகட்ட முடிந்தாலும் -
இதில்
ஆயிரம் காலமாய்த் தோற்றுவிட்டோம்
வீரியமாகவே செயல்படணும் அதை
வேறுவிதமாக எத்தனிப்போம்

(இவ்வாறு பேசிய தந்தை எலி விரைவாக செயல்பட்டு. எலிகள் வாழும் இடங்கள் தோறும் இரகசியமாகவே சென்று பூனையின் கொடுமையை ஒழிப்பது பற்றி ஆலோசிக்க எலிகளின் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்தது.)

**எலிகளின் மகாநாடு**
**இனிதே ஆரம்பம்**

தலைமை வகித்தது தந்தை எலி
தயவாய் ஒன்றை எடுத்தியம்பும்
பூனைகள் வாழ பூமியிலே
போதும் அளவில் இடங்களுண்டு
பொந்தில் வாழும் எம்மவரை
போகப் போகத் துரத்துவது ஏன்?
எமக்குத் தனியே பாசையுண்டு
எளிதாய்ப் பழகும் கலைகளுண்டு
வணங்கும் தெய்வ முறைகளுண்டு
வகையாய் அமைந்த தேசமுண்டு
அதிக பலத்தை கொண்டதனால் -
எம்மை
அடிமையாக்க முயல்வதுமேன்?

எத்தனை காலம் பொறுத்திடுவோம்
இனியும் வேண்டாம் முடிவெடுப்போம்
போட்டி பொறாமை ஒழித்திடுவோம்
பொதுவாய் எதையும் பார்த்திடுவோம்
காட்டிக் கொடுக்கும் கயவர்களை
களைந்து ஓடச் செய்திடுவோம்

**ஏனாம் இந்த**
**வேற்றுமைகள்**

இருந்தும் ஒன்றைக் குறிப்பாக
எடுத்துச் சொல்வேன் கேட்பீரே
நமக்குள்ளிருக்கும் பிரிவினைகள்
நா:சகார வேற்றுமைகள்
தூசாய்ப் பறக்கச் செய்திடுவோம்
துணிவு பிறக்கும் அதன் மேலே
ஒன்றா சாதி நமக்குள்ளே?
ஓராயிரமாம் கணக்கில்லை

கோட்டை எலியாம் ஒரு கூட்டம்
வீட்டு எலியாம் மறுகூட்டம்
கூட்டு எலியாம் ஒரு கூட்டம்
காட்டு எலியாம் மறு கூட்டம்

சுண்டெலி என்று ஒரு கூட்டம்
குண்டெலி என்றும் ஒரு கூட்டம்
புற்றெலி என்றும் ஒரு கூட்டம்
புதர் எலி என்றும் மறு கூட்டம்
பிள்ளையாரின் வாகனமாம்
பெருமை பேசும் ஒரு கூட்டம்
மலை எலியென்று ஒரு கூட்டம்
மண்ணெலி என்றும் ஒரு கூட்டம்
கூட்டுக்குள்ளும் குளறுபடி
கூறக்கவலை வருகிறது

எத்தனை கூட்டம் இருந்தாலும்
எலிதான் எமது பொதுப்பெயராம்
அந்தப் பெயரில் அனைவருமே
அமைந்து நடந்தால் நலமுண்டு
அண்ணன் தம்பி வேற்றுமைகள்
ஆட்சி பிடிக்கும் போராட்டம்
குத்துவெட்டு நடப்பதனால்
கோட்டை விடுவது இனம் தானே
போதும் போதும் இந்நிலைமை
புதிதாய்க் காரியம் பார்த்திடுவோம்

**இந்தச் சமயத்தில்**
**இளைய எலி ஒன்று**
**எழுந்து பேசிடும்**

பூனையுலகிலும் எத்தனையோ
பொல்லா இனங்கள் பலவுண்டு
சிங்கம், புலி, சிறுத்தை இன்னும்
சிற்சில பிரிவுகள் காட்டிலுண்டு
நாட்டில் வாழும் பூனைகள்தான்
நமக்கு எதிரி கண்டீரோ

அன்றைய எமது முன்னோர்கள்
அடுத்தடுத்தெடுத்த முடிவுகளில்
பூனைக்கு மணியைக் கட்டுவதாம்
பொருத்தமற்ற முடிவுகளில்
மடத்தனமானது வேறு இல்லை
மாற்று வழியை யோசிப்போம்
பூனைக்கும் பாடம் படிப்பிப்போம்
புதிய வழியில் நகர்ந்திடுவோம்

**பூனையைத் தாக்கும்**
**எலிகளின் திட்டம்**

இளைய எலி மேலும் கூறும்...

குழுகுழுவாக அணிவகுப்போம்
கூடி ஒன்றாய் முன்செல்வோம்
வடக்கில் ஒரு குழு அமர்ந்திடணும்
கிழக்கில் இன்னொரு குழு அமரும்
தெற்கில் ஒருகுழு பதுங்கிடணும்
மேற்கில் ஒருகுழு ஒளிந்திடணும்
ஏனைய குழுக்கள் எங்கெங்கும்
இடைவெளி தேடி அமர்ந்திடணும்

**பூனையின் நிலை**

வளைக்கு வெளியில் வாசலிலே
வந்துஅமர்ந்த பூனையாரும்
வருவாய்தானே சுண்டெலியே
வறுத்து எடுத்துத் தின்பேனே
என்று கூறி இறுமாப்பாய்
இருந்து குறட்டை விடலானார்

தினமும் இதுவே நடக்கிறது
திண்டாட்டம்தான் எலிகளுக்கு
ஒருநாள் பூனை வருவதற்கு
நேரம் கடந்து போனதனால்
அதையே தருணமெனக் கண்டு
அணி அணியாக எலிகளெலாம்
அமைதியாக வெளிவந்து
புதர்கள் எங்கும் பதுங்கினவாம்
பூனை வரவை எதிர்பார்த்து

**சங்கதி அறியாத**

**பூனைப்பிள்ளை**

புதர்கள் தோறும் எலிகள் பதுங்கி இருக்கும் சங்கதி தெரியாத பூனைப்பிள்ளை வளைக்கு வெளியில் வந்துபடுத்து கண்ணை மூடிக் கொண்டிருப்பார்

அந்தவேளை பார்த்து எலிகள்
அடுக்கடுக்காக வெளிவந்து
படுத்திருக்கும் பூனைமீது
படபட வெனவே பாய்ந்திடுமாம்
பதறிப்போன பூனையாரும்
பல்லை இளித்துக்கொண்டபடி
எகிறிக் கொண்டு பாய்வாராம்
இடறிக்கொண்டு விழுவாராம்

**எலிகள் நடத்திய**
**பெரும் தாக்குதல்**

வாலைப் பிடிக்கும் ஒரு கூட்டம்
வயிற்றில் இடிக்கும் மறு கூட்டம்
முதுகில் பாயும் ஒரு கூட்டம்
முட்டித் தள்ளும் மறு கூட்டம்
காதைக் கடிக்கும் ஒரு கூட்டம்
காலைக் கடிக்கும் மறு கூட்டம்
கழுத்தில் கடிக்கும் ஒரு கூட்டம்
கண்ணில் குத்தும் மறு கூட்டம்

எலிகள் எல்லாம் இவ்வாறு
இணைந்து செய்த செயலாலே
வலிய பூனை தடுமாறி
வாலைச் சுருட்ட நேர்ந்ததுவே

பூனையின் அரவம் கேட்டாலே
போவார் எலிகள் காதவழி
என்ற நிலைமை மாறியமை
எவ்வாறென்று யோசித்தால்
ஒற்றுமை ஒன்றே பலமாகும்
ஓதலில் அதுவே முதலாகும்
அடம்பன் கொடியும் திரளுமெனில்

*மிடுக்காய் மாறும் என்பதனை*

*சான்றோர் அன்றே சொன்னார்கள்*
*அதுவே எவர்க்கும் படிப்பினையாம்*

*தாக்கப்பட்ட பூனைப் பிள்ளை*
*தரையில் சாய்ந்து கிடக்குது*
*தாக்கிவிட்டட எலிகள் எல்லாம்*
*தாளம்போட்டு பாடுது*

**கொடுமை**
**ஒழிந்தது**

*பூனைக் கொடுமை ஒழிந்தது*
*புதிய காலம் பிறந்தது*
*ஆட்டம் போட்ட பூனையை*
*அடக்கிவிட்டோம் அறிவினால்*
*ஒன்றுபட்டுவிட்டோம் நாம்*
*ஒருவருக்கும் பயமில்லை*
*நன்று இந்த ஒற்றுமை*
*நலம் பயக்கும் யாவர்க்கும்*
*வாழ்க இந்த ஒற்றுமை*
*வாழ்க வாழ்க வாழ்கவே*

*(எலிகள் எல்லாம் இவ்வாறு தங்களின் ஒற்றுமை மூலம் தமது பொது எதிரியை வென்றுவிட்ட களிப்பில் ஆடிப்பாடிக் கொண்டிருக்கையில் அடிபட்டுக் கிடந்த பூனை மெதுவாக எழுந்து தடுமாறிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நழுவிச் சென்று உயிர்தப்பிக்கொண்டது)*

# கரிச்சான் குருவியின் பாடல்

*கரிச்சான் குருவி கிளைதோறும்*
*களிப்பாய்ப் பாடும் காலையிலே*
*அரிச்சுவடியை உரைப்பதுபோல்*
*அழகாய் பாடுதல் கேட்டதுண்டோ*

*குயிலைப் போல கூவாது*
*கூக்குரலிட்டும் கத்தாது*
*இனிமையான குரல் எடுத்து*
*இசைக் கச்சேரி நடத்திடுமே!!*

*இணையை அழைக்கும் ஒரு குரலில்*
*இரையைக் கண்டால் வேறுகுரல்*
*குஞ்சை அணைக்கும் ஒரு குரலில்*
*குதூகலமானால் வேறு குரல்*

*பாடும் பறவை இனங்களிலே*
*பலவகையுண்டு பாரினிலே*
*ஈடு இல்லா பறவையெனில்*
*இருப்பது கரிச்சான் இனம் ஒன்றே*

*காட்டு மைனா பாடுமென்பார்*
*களிப்பில் கிளியும் பேசும் என்பார்*
*வீட்டுக்கருகில் பாடுகின்ற*
*விந்தை குருவி இதுவன்றோ*

கரிச்சான் குருவி பாடுவதை
காலையில் மாலையில் கேட்டிடலாம்
எரிச்சல் குணங்கள் மாறிவிடும்
இறைவன் படைப்பும் புலனாகும்

# வாழ்த்துப் பாடும் தவளைகள்

துள்ளிப்பாயும் தவளையைத்
துரத்திப் பிடிக்க பார்க்கின்றேன்
எள்ளி நகை யாடுது
ஏளனமாய்ச் சிரிக்குது

சேற்றுக்குள்ளே புதையுது
திரும்பி வந்து பார்க்குது
ஆற்றுவெள்ளம் வருகையில்
அதற்குள் மூழ்கி மறையுது

மழையும் காற்றும் வந்திடில்
மறைவில் இருந்து மிதக்குது
பழைய பாட்டை தாளம் போட்டு
பாடிக் கொண்டு இருக்குது

கீச்சு மூச்சு தாம்பாளம்
கீய்யா மூய்யா தாம்பாளம்
வாய்ச்சுப் போச்சு என்று சொல்லி
வாய் வலிக்கப் பாடுது

மாரி காலம் வந்ததும்
மகிழ்ந்து 'கோரஸ்' பாடுது
ஏரி, கேணி எங்கிலும்
இரைச்சல் சத்தம் கேட்குது

*வாழ்க இந்தத் தவளைகள்*
*வாழ்த்துப்பாடும் தவளைகள்*
*வையகத்தார் யாவரும்*
*வாழ்க, வாழ்க, வாழ்கவே*

# பாலர் கூடினோம் பாட்டுப் பாடுவோம்

பாட்டு பாடவே
பாலா கூடினோம்
கூட்டம் கூடினோம்
கூடிப் பாடுவோம்

ஆட்டம் ஆடுவோம்
ஆடிப் பாடுவோம்
பாடி ஆடுவோம்
பரிசை வெல்லுவோம்

கைகள் வீசுவோம்
கால்கள் நீட்டுவோம்
கண்கள் மூடுவோம்
கழுத்தை ஆட்டுவோம்
குனிந்து கொள்ளுவோம்
நிமிர்ந்து கொள்ளுவோம்
அமர்ந்து கொள்ளுவோம்
எழுந்து கொள்ளுவோம்

பாய்ந்து ஓடுவோம்
பதுங்கி மீளுவோம்
துள்ளி குதிப்போம்
தொடர்ந்து துள்ளுவோம்
ஓய்வு கொள்ளுவோம்
ஒழுங்கை பேணுவோம்

மூச்சை இழுத்து விடுப்போம்
உடல்நலத்துக்கு இது
உகந்த பயிற்சியாம்
உவகையோடு நாம்
உணர்ந்து செய்குவோம்

# படைப்பவனும்
# உழைப்பவனும்

மிக்க வுயர் மலையகத்தில்
மேவிய தோர் உறவதனில்
உற்ற வொரு நண்பனாங்கு
உயர் நிலையில் வாழ்ந்ததனால்
அன்னவனின் அழைப்பினை நான்
ஆவலுடன் ஏற்று ஓர் நாள் (அவன்)
சொன்ன வழிதனில் நடந்து
சுகமாகப் போக லுற்றேன்!

**கண்களுக்கு விருந்து**

படுத்திருக்கும் யானைகள் போல்
பார்வைக் குத்தோற்றந் தரும்
பாரியகற் பாறைகளும்
பசுமரத்துச் சோலைகளும்
சீரியநற் சிந்துகளை
செவிகளுக்குள் ஊட்டுகின்ற
நாரியர் போல் ஓடி வந்து
நடனமிடும் ஓடைகளும்
மேவியதாம் குன்றுகளின்
மேலிருந்து பாய்ந்துவிழும்
கோலமிகு மருவிகளும்
கொண்டாடும் குருவிகளும்
நீண்டு படுத்திருந்து
நெளிவெடுக்கும் பாம்பினைப்போல்
உச்சி மலை நோக்கி

ஊர்ந்து செலும் பாதைகளும்
கச்சிதமே- கண்களுக்கும்
கனிவுதரும் காட்சிகளே

**மாயக்குரல்**
**கேட்டது**

மேலே தெரிவது மலைப் பாறை
கீழே இருப்பது பள்ளத்தாக்கு
காலை ஊன்றி நான் கவனத்துடன்
கள்வனைப் போலங்கு நடந்திடுவேன்
மாலை மயங்கிடும் நேரமது - மேகம்
மப்பும் மந்தாரமாய்த் தோற்றுகையில்
நேரத்துடன் சென்று சேர்ந்திடவே -
நானும்
நீட்டி நடைதனைப் போடலுற்றேன்
வேகத்துடன் நடை போட்டதனால் -
உடல்
வேர்த்துக் களைக்க சற்று ஓய்கையிலே
மாறி மாறி யாரோ பேசுதல் போல் - ஒரு
மாயக்குரல் காதில் மோதியதே

**விண்ணில்**
**நடப்பது போல்**
**நடந்தான்**

மலையின் சரிவில் நடைபாதையிலே -
ஒரு
மனிதன் மெதுவாய் இறங்கி வந்தான்
வந்தவன் ஏதோ தனக்குள் தானே -
மெல்ல
வாய்க்குள் கதைப்பது போல்
கதைத்தான்
அந்த மனிதனைக் கண்டவுடன் -
நானும்

அதிசயமாவே பார்க்கலுற்றேன்
விந்தை என்னவெனில் விளம்பிடுவேன்
-அவன்
விண்ணில் நடப்பவன் போல் நடந்தான்
கன்னமிரண்டும் குழி விழுந்துபோய்
கைகள் மெல்லிய குச்சிகள் போல்
கண்களிருக்குமிடத்தினிலே - இரு
காசு வைத்தாற் போல தோற்றியதே
இந்தவிதமான கோலத்துடன் - அவன்
என்னை நோக்கியே நகர்ந்து வந்தான்
- பின்
சோகம் நிரம்பிய குரல் தனிலே - அவன்
சொன்னதை அவ்விதமே உரைப்பேன்

**பைசாசம்**

**அல்ல நான்**

பயப்படாதே தம்பி நீ - நான்
பைசாச மல்ல
பலகாலம் இந்நாட்டில்
பாடுபட்டுழைத்து - மிகக்
கேடு கெட்டுப் போனதினால்
கிடைத்தவுரு (இது) கண்டாய்
ஏழைகளை எளியவரை
ஏய்த்துப் பிழைப்பவர்கள்
நாட்டுக் குழைத்தவரை
நட்டாற்றில் விட்டவர்கள்
மாட்டை விட மனிதர்தமை
மதியாது போனவர்கள்
கொள்ளை யடிப்பவர்கள்
கொலைக்கு மஞ்சாதவர்கள்
இறந்த பின்னர் இவ்வுலகில்
என்னவிதமாய் பிறப்பார்?
பிதற்றுகிறேன் என்று என்னை

பிசகாக எண்ணாதே
பேய்களாய் பிசாசுகளாய்
பிணந் தின்னும் கழுகுகளாய்
பிறந்திடவும் மாட்டாரோ?
நாய்போல இந்நாட்டில்
நன்றியுடன் உழைத்தவன் யான்
பேயாக நான் பிறக்க
பிழையேதும் செய்ததில்லை
இவ்வாறு கூறிவிட்டு
இன்னுமவன் சொல்லிடுவான்
அதிகமாகப் பேசுதற்கு
அவகாசம் போதாது
சுருக்கமாக சிலவற்றை
சொல்லிவிட்டுப் போயிடுவேன்
யாரு செய்த புண்ணியமோ
யானும் சற்று படித்துவிட்டேன்
சிரேட்ட தராதரத்தில்
சித்தியடைந்த பின்பு
ஏற்றதொரு தொழில் தேடி
ஏக்கம் மிகக் கொண்டேன் நான்
செல்லாத இடமெல்லாம்
சென்று தலை குனிந்து
பல்லை மிகக் காட்டி
பரிகாசப் பொருளானேன்
அரசுத் தொழில் ஒன்றும்
அன்றில்லை எம்மவர்க்கு
பிரஜாவுரிமை யென்று
பெரிதாகக் கேட்டார்கள்
பிறந்து வளர்ந்து இங்கே - வேறு
பிரதேசம் போகாமல்
இருந்து வளர்ந்தவனை
இழிவாகப் பேசினார்கள்

**இந்நிலையில்**
**காதல்**

*காதல் வயப்பட்டேன்*
*கை பிடித்தேன் ஓர் பெண்ணை*
*தொழில் இல்லா பேதையர்க்கு*
*சுகம் வேறு கேடாமோ*
*தொழிலாளி யாவதற்கு*
*படிப்பேதும் தேவையில்லை*
*தொழிலாளி ஆகிவிட*
*சுருக்காய் ஓர் முடிவெடுத்தேன்*
*தொழிலாளி ஆகிவிட்டேன்*
*தோட்டத்தில் வேலை செய்தேன்*
*பாட்டாளியான பின்பும்*
*பட்ட துயர் கொஞ்சமில்லை*

**கண்ட பலன்**
**ஒன்றுமில்லை**

*ஓழைச் சொழைச்சு கண்ட பலன்*
*ஒன்றுமில்லை கண்டீகளோ*
*உணவுக்கும் பத்தாது*
*உடை உடுக்கப் போதாது*
*யாரிடம்தான் சொல்லுவது*
*யார் எமக்காய்ப் பேசுவது*
*சங்கம் வச்சு பேசுவாக*
*சவடாலும் காட்டுவாக*
*தொழிலாளி பிரச்சினையில்*
*சொகம் காண்பர் பலபேர்கள்*
*ஒருரூபாய் ஏறிச்சினா*
*ஒன்பது ரூபாய் செலவாகும்*
*சந்தா பணத்தை மட்டும்*
*தவறாமல் வாங்குவாக*
*வாங்கும் பணத்திலேதான்*
*சங்கம் நடத்துவாக*

அந்தப் பணத்திலேயும்
அள்ளிவைக்கும் பேர் வழிங்க
கையாடல் செய்வாக
கணக்கை புறட்டுவாக
கண்டுபிடிச்சாலோ
கணக்காய் நழுவுவாக
கதைநூறு சொல்லுவாக
புதுசங்கம் வைப்பாக
இந்தவிதம் பாத்தியளோ
எவரை ஐயா நம்புவது
இருந்தாலும் சில பேர்கள்
இருக்கத்தான் செய்தார்கள்
அந்த நல்ல மனிதர்களும்
ஆன மட்டும் ஒழைச்சாங்க
அந்த ஒழைப்பிலேதான்
ஏதோ நடக்குதுங்க

**குடியுரிமை**
**வாக்குரிமை**
**போச்சுது**

எங்களப்பன் இங்கேதான்
பிறந்து வளர்ந்தவராம்
அவர் அப்பன் ஆங்கிலத்தான்
காலத்திலே வந்தவராம்
இருந்தாலும் எங்களுக்கு
குடியுரிமை போச்சுதுங்க
குடியுரிமை போனதாலே
வாக்குரிமை போச்சுதுங்க
வாக்குரிமை போனதாலே
வலுவிழந்து போனமுங்க
நிரந்தரமா வேலையில்லை
நிர்க்கதியா போச்சுதுங்க
பெஞ்சாதி பிள்ளைகளும்

பேதலித்துப் போனாங்க
அங்கே சில காலம்
இங்கே சில காலம்
அலைந்து திரிஞ்சதிலே
அல்லல் பட்டு போனமுங்க
அல்லல்பட்டுப் போன எம்மை
அவமானம் செஞ்சாங்க
போசாக்கு இல்லாமல்
பெஞ்சாதி செத்தாங்க
பிள்ளைகளும் இரண்டுபேரு
பெரும்பாடாய்ப் போச்சுதுங்க
காப்பாத்த முடியவில்லை
கஞ்சி ஊத்த வக்கில்லை
அநாதரவாய் வுட்டுப்புட்டு
அய்யோன்னு போயிட்டேன்க
போனவன் நான் என்ன செய்தேன்
புலம்பிடுவேன் கேளுங்கையா

**அவன்**

**விருப்பம்**

இவ்வாறு கூறியவன்
இடைநடுவில் நிறுத்திவிட்டு
அதோ யாரோ வாறாங்க
அதனாலே போகனுங்க
இருந்தாலும் ஒரு வார்த்தை
இயம்புகிறேன் என்றிட்டான்
தோட்டத்திலே வேலை செய்யும்
தொழிலாளி மக்களுக்கு இறுதியிலே
நிம்மதியாய்
இருப்பதற்கும், இறப்பதற்கும்
இறந்த பின்பு கௌரவமாய்
எரிப்பதற்கும் புதைப்பதற்கும்
ஏற்றதொரு முறை தன்னை

*இரக்கமுடன் செய்திடனும்*
*எவர் செய்யப் போறாங்க*
*செய்றவங்க தெய்வமுங்க*
*இவ்வாறு பேசியவன்*
*மீண்டும் நிறுத்திவிட்டு*
*நேரம் நல்லா போயிட்டுது*
*நான் போக வேணுமுங்க*
*என்றபடி மெதுவாக*
*இறங்கி நடக்கலுற்றான்*

**யார்**
**நீங்கள்**

*அவ்வேளை அவ்வழியே*
*யாரோ வரும் சத்தம்*
*நன்றாக கேட்டிடவே*
*நான் திரும்பிப் பார்க்கலுற்றேன்*
*வந்தவர்கள் எனைக்கண்டு*
*வாயடைத்துப் போனார்கள்*

*"என்ன ஐயா, யார் நீங்கள்*
*எங்கே இப்பப் போறீங்க?*
*என்றவர்கள் கேட்டிடவே*
*என் நிலையை தெரிவித்தேன்*
*"நல்ல காலம் நாங்கள் வந்தோம்*
*இல்லையினா இன்னேரம்*
*எங்கே கிடைப்பீங்களோ*
*எவர் அறிவார்? என்றார்கள்*
*எனக்கு ஒன்றும் புரியவில்லை*

*"சரி, சரி நடவுங்கையா*
*எங்களுடன் வாருங்கள்*
*கொண்டுபோய் விடுகின்றோம்*
*அவர்களுடன் நான் போனேன்*

ஆச்சரியம் யாதுவென்றால்
சற்றுமுன்னர் என்னுடனே
சகசமாகப் பேசியவன்
எங்கு சென்றான், எவ்வழியில்?
எனக்கு ஒன்றும் தெரியவில்லை

**நண்பனின்**

**கூறிய தகவல்**

நண்பனவன் வீடுதனை
நான் சென்று அடைந்த பின்னே
அவன் சொன்ன கதைகேட்டு
அயர்ந்து போனேன், அம்மா ஓ!
முன்னர் ஒரு காலத்திலே
முனியன் என்றோர் ஆள் இருந்தான்
அம்மனிதன் வாழ்க்கையிலே
விரக்தியுற்று போனதினால்
மலை உச்சிதனில் இருந்து
பாய்ந்து யிரைப் போக்கினனாம்
அதனாலே அவன் ஆவி
அப்பகுதி முழுவதுமே
அலைந்து திரிகிறதாம்
நேரம் கெட்ட நேரத்திலே
தனி வழியில் வருவோரை
அவனாவி பிடித்திழுத்து
அப்படியே தள்ளிடுமாம்
தோட்டத்துரை முதலாம்
துரைத் தனத்தார் யாவருமே
கண்டாக்கு கணக்குப் பிள்ளை
கங்காணி என்பவரும்
தனியாக அவ்வழியில்
தவறிக்கூட போவதில்லை

**ஏன் என்னை**

**விட்டு வைத்தான்**

என்றாலும் என்னை மட்டும்
ஏன் விட்டு வைத்தனனோ?
படைப்பாளி என்பதனால்
பரிதாபம் கொண்டானோ
உழைப்பவனும் படைப்பவனும்
ஒருசாதி என்பானோ
உழைப்பதுவும் படைப்பதுவும்
உலகத்தில் உயர் செயலே
உழைக்காமல் உண்பவர்கள்
உலகத்தின் பெருந்துயரே

# பயிலும் பத்திரிகையாளருக்கு

பத்திரிகையாளனாய்
வருவதற்கு - வெறும்
பட்டப்படிப்புகள் போதாது காண்
கற்ற படிப்புடன் மேலும் பல பல
காரியானுபவம் வேண்டும் கண்டாய்
அந்த விதத்திலே உயர்வதற்கு - சில
ஆலோசனைகளுண்டு
கேட்டுக்கொள்வாய்

பத்திரிகை ஒன்றிலே
பயில வேண்டும் - அங்கே
பலதையும் பார்த்து நீ
பழக வேண்டும்
முத்திரையாகிடும்
விடயங்களை - முழு
அக்கறை காட்டியே
அறிய வேண்டும்

சித்திரமாகவே
கற்பவற்றை - உந்தன்
சிந்தையில் - பூட்டி
வைக்க வேண்டும்
கண்டதை எல்லாமே
கற்க வேண்டும் - அதில்
கருத்துக்குரியதை

சேர்க்க வேண்டும்

மூத்தவர் செய்வதைப்
பார்க்க வேண்டும் - அவர்
முயலும் முறைகளை
ஈர்க்க வேண்டும்
தலைப்புக்கள் போடவும்
பழக வேண்டும் - சொல்லை
தக்க வகையிலே
கோர்க்க வேண்டும்

செய்திகள் எல்லாமே
செய்தியன்று - பல
செய்திக்குள் செய்தியைத்
தேட வேண்டும்
தேடிய செய்தியை
சீர்படுத்தி - அதை
செய்தித் தலைப்பென
காட்ட வேண்டும்
கலைகள் பலதையும் கற்றவன்போல்
சில(சமயம்)
காரியமாற்றவும் தெரிய வேண்டும்
அரிய பொருள்களைத் தேடி வைத்து - அவை
அமையும் இடத்திலே பொருத்த வேண்டும்
பட்டிதொட்டி யெல்லாம் போக வேண்டும்
பார்ப்பவை கேட்பவை யாவற்றையும்
கெட்டித்தனமாக
வழங்க வேண்டும் - பின்னர்
கேள்வி எழாவண்ணம்
பார்க்க வேண்டும்
மோப்பம் பிடித்திடும்
மூக்கு வேண்டும் - செய்தி

முந்தும் விதத்திலே
கொடுக்க வேண்டும்

வானொலி கேட்பதும்
முக்கியமே - தொலைக்காட்சியிலும்
நல்ல செய்தி வரும்
கணனி அறிவினில்
சிறப்பாயெனில் - அது
காலமெலாம் வந்து
கைகொடுக்கும்

அறிவில் சிறப்பது
மட்டுமல்ல - மொழி
அறிவிலும் நன்கு
சிறக்க வேண்டும்
நாட்டின் மொழிகள்
பலவற்றுடன் - மேலை
நாட்டார் மொழியிலும்
பயிற்சி கொள்வாய்
போட்டி மிகுந்திட்ட
காலமிது - போட்டி
போட்டால்தானே - வாழ்வில்
உயர்ந்திடலாம்

தோல்வி என்றுவரின்
சோர்வைத் தவிர் - அதில்
சோகமடைவதற்கு
ஒன்றுமில்லை
தோல்வி என்பதும் ஓர்
படிதான் - அதன்
மீதும் பல படிகள் கட்டிடலாம்

# அன்புள்ளம்

*அன்புள்ளம் கொண்டவர்கள்*
*ஆத்திரம் கொள்வதில்லை*
*சிறியவர் செய் குற்றங்களை - அவர்*
*சினத்துடன் நோக்கிக் கடிவதில்லை*

*என்னதான் இடர்கள் வந்தாலும்*
*எவர்தான் குறைகள் சொன்னாலும்*
*பொன்னுடன் பொருள்கள் போனாலும் -*
*அவர்*
*பொறுமை இழந்துபோவதில்லை*

*துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும்*
*தொல்லையே எதிலும் நேர்ந்தாலும்*
*இன்பங்கள் இழந்து போனாலும் - அவர்*
*இழிவாய் நடந்து கொள்வதில்லை*

# நல்லவரும் பொல்லாதவரும்

நல்லவரென்று நினைப்போரெல்லாம்
நல்லவராய் இல்லை
பொல்லாதவரென்று நினைப்போரெல்லாம்
பொல்லாதவராயில்லை
நல்லவரும் பொல்லாது செய்வார்
பொல்லாதவரும் நல்லது செய்வார்
இல்லாதவராய் இருந்தபோதும்
இல்லையென்று சொல்லாதவருண்டு
இருப்பவர்கள் இல்லாதவர் போல்
நடிப்பவருமுண்டு
கல்லாதவர் கற்றவர் போல்
கதைப்பவருமுண்டு
கற்றவராய் இருந்தும்
கல்லாதவராய் காண்பவருமுண்டு
கண்கள் இருந்தும் எதனையும்
காணாதவருண்டு
காணாதவராய் இருந்தும்
கலைகளில் மேதாவிகளும் உண்டு

# காலத்தின் கோலம்

*என் தோட்டத்திலே ஒரு*
*றோசா மலர்*
*சில்லென்று பூத்திருக்கு*

*அதன் மணமோ எவர்*
*மனதையும் கவர்ந்திழுக்கும்*
*அதன் குணமோ எவருக்கும்*
*நல்லதாய் பிடித்திருக்கும்*

*றோசாவைப் பறித்திட*
*எண்ணாதே அதில்*
*ஏராளம் முள்ளிருக்கும்*
*முள்ளுடன் மோதிட*
*எண்ணாதே - உன்*
*முகத்திலே காயம் வரும்*

*காயம் வந்தால் அதில்*
*கவலை என்ன? அது*
*காதலின் அறிகுறியாம்*
*காதல் கொள்வோன் எதிர்*
*கொள்ளும் இவை*
*காலத்தின் கோலம் அன்றோ!*

## வந்தவர் யார்?

*(தலைவி தன் தோழியாம் கிளியைப் பார்த்து பாடுவதாக ஒரு கற்பனை)*

*வந்தவர் யார் வழியில்*
*நின்றவர் யார் என்மனம்*
*வென்றவர் யார்*
*சொல்லுவாய் கிளியே!*

*முந்தைய வாழ்வினில்*
*முறையாக வந்தவரோ*
*எந்தையின் சோதரிக்கு*
*இருந்தவோர் தலைமகனோ*
*சிந்தை கலங்குதடி*
*செப்பிடுவாய் கிளியே*
*வந்தவர் யார் - என்*
*கனவினில் சொல்*
*பக்கத்து வீதியிலே பார்த்திட்ட*
*முகமும் இல்லை*
*செக்கச் சிவந்த மேனி - செப்பிட*
*முடிகுதில்லை*
*வெட்கம் தலைக்கேறி*
*விதுவிதுப்பாகுதடி*
*கிளியே வந்தவர் யார்*

*சொந்தமும் இல்லையடி*
*நந்தகோபன் தன் பிரிய*
*மைந்தனுமில்லை இவர்*

சந்தடியே இல்லாது
சடுதியில் அருகில் வந்து
வந்தனம் என்றாரே
வடிவாக வாய் திறந்து
அந்த அவர் யார்?
அறிகுவையோ,
சொல்லுவாய் கிளியே
வந்தவர் யார்?

ரோமியோ அவர் என்றாலோ
ஜுலியட் நான் இல்லையே
அம்பிகாபதி என்றாலும்
அமராவதி நான் இல்லை
ஆசை பெருகுதடி அவர்
ஆர் என்று நான் அறிய
சொல்லுவாய் கிளியே

கரும்பினில் வில்லெடுத்து
காதல் மலர் தொடுக்கும்
கந்தர்வன் தானோ - அந்த
காமன் அவதாரமோ?
வந்தவர் யார் கிளியே

முந்தை சிவனுமில்லை
மூவுலகும் போற்றும் கந்தனுமே இல்லை -
அவர்
விந்தையாய் குழல் ஊதும்
நந்தனுமில்லை எனில்
சிந்தை சிதறுதடி - சீக்கிரமே
இந்த விந்தை மனிதர் எவர்
விளம்பிடுவாய் கிளியே
என்கனவினில் வந்தவர் யார்

# பிந்து கரம் தந்த
# பந்து சிகிச்சை

தலைச்சுற்றின் தாக்கம்
உடல் நிமிர முடியாமல்
பாட்டனார் படும்பாடு
பேரன் புரிந்திருக்க நியாயமில்லை

எண்பது வயதுக் கிழவரை
மூன்றரை வயது பேரன்
விளையாட வரும்படி அழைக்கிறான்
வராததால் சீற்றம் கொள்கிறான்

மனுசர் அயர்ந்து
களை தீர கண்மூடி
உறக்கம் கொள்கிறார்

தடால் என அவர் தலை மீது
அடி விழுகின்றது
திடீரெனக் கிழவர்
துடித்துப்போய்
எழுந்து பார்க்கிறார்
சிறுவன் இரும்புத் தடியுடன்
பக்கத்தில் நின்று சிரிக்கிறான்

அதிர்ச்சியில் விழிக்கும்
கிழவருக்கு முகத்திலும்
குத்துகள் விழுகின்றன

பிஞ்சுக்கரத்தின்
குறும்புத் தனமான
பஞ்சுக் குத்துகளால்
பரவசமாகும் கிழவர்
வாய்விட்டு சிரிக்கிறார்

தலைசுற்றும்
தளர் நிலையும்
தவிடுபொடியாகின்றன
கிழவருக்கு இப்போது
நல்லசுகம்
பேரனுடன் விளையாடப்
போகிறார்

# அகரவரிசையில்
# அறிவுரை

அ

அம்மாவை வணங்கி பெறும்
அறிவுரை ஆக்கம் தரும்
அப்பாவின் சொல்லில் உள்ள
ஆழத்தைக் கருத்தில் கொள்க

ஆ

ஆணவம் கொள்ளாதே - அது
அழிவுக்கே வழிசமைக்கும்
ஆயிரம் கொடுத்தாகிலும் - கல்வி
அறிவினை வளர்த்துக் கொள்க

இ

இனிமையாகப் பேசுவதை இயல்பாக
பழகிக் கொள்வாய்
இணங்கி செயல்படுவதென்பது
இருதரப்புக்கும் உரிய செயல்

ஈ

ஈசனைத் தொழுத பின்னரே
எதனையும் தொடங்க வேண்டும்
ஈனும் பசுமாடுதான் வாழ்வில்
இடும்பினைத் துடைக்க உதவும்

உ

உறவுகளைப் பேணிக்கொள்வாய்
உதவிகள் உறுதியாகும்
உடலினைப் பேணுவையேல் - அது
உயிரினை உறுதி செய்யும்

ஊ

ஊரே திரண்டு வந்தபோதிலும்
உண்மையைப் பேசத் தயங்காதே
ஊதியம் நிர்ணயமான பின்பே
உழைப்பினை வழங்க வேண்டும்

எ

எத்தரின் உறவு வேண்டாம்
ஏளனம் எதிர்கொள்ள நேரும்
எத்திசை சென்று உழைக்க நேரினும்
சித்தனாக வாழ்தல் சிறப்புத்தரும்

ஏ

ஏய்த்து பிழைப்பு செய்தல்
நாயின் பிழைப்புக்கு ஒப்பாகும்
ஏழைகளாய் வாழ்வோர் எல்லாம்
கோழைகளாய் இருப்பதில்லை

ஐ

ஐயா எனும் உயர் நிலையை
பொய் புகல்வார் எய்யமாட்டார்
ஐந்து வயதில் சிறக்கும் பிள்ளைதான்
அறுதிவரை சிறக்கும் திண்ணம்

ஒ

ஒல்லியாய் உடல் அமைந்தாலும்
உறுதியாய் செயல்படுவாயாக

ஒன்றாக இருந்தோர் எல்லாம்
வென்றார் என்பதே வழக்காகும்

ஓ
ஓணான் போல் வாழாமல்
உண்மையாய் வாழ வேண்டும்
ஓயாமல் உழைப்பவர்க்கும்
ஓய்வு நிலை வேண்டும் என்க

ஔ
ஔவைப் பாட்டியின் பாட்டை
அறிந்து விளக்கம் கொள்வாய்
ஔவியம் எவருக்கும் ஒருபோதும்
உயர்வு தந்த வரலாறு இல்லை

# கண்ணன் தந்த காட்சி

கண்ணனை நான் கண்டேன் - ஒருநாள்
கடற்கரை ஓரத்திலே
விண்ணின் விளிம்பதனில் - ஆதவன்
விடைபெறும் நேரத்திலே

புல்லாங்குழல் எடுத்து ஊதிநின்றான்
புதுப்புது ராகங்களில் - இசை
எல்லா திசையிலும் ஏகிற்றம்மா - அதை
என்னென்று நான் உரைப்பேன்

கன்னங்கரியவுடல் - கால்கள்
பின்னிப் பிணையும் - விண்ணில்
மின்னல் ஒளிர்வதுபோல் - சுழன்றென்
மன்னன் நடம்புரிந்தான்

மாலை நற்சூரியனின் வண்ணங்கள்
மாயைகள் புரிகையிலே
கோலை இசைத்தபடி - மணிவண்ணன்
கோதில் நடம் புரிந்தான்
பாலை அருந்திநிற்கும் - பசுக்கன்றின்
பாங்கில் நான் நின்றிருக்க
வேலை முடிந்ததுபோல் அவனும்
விண்ணில் மறைந்துவிட்டான்

ஏக்கமோ தீரவில்லை - இவன்போல்
இறைவனெவருமில்லை
தூக்கம் வராவிடினும் - மனதினில்
தூங்குமவன் வடிவம்
காக்கும் கடவுளிவன்போல் - கண்முன்னே
காட்சிதரும் ஒருவர்
பார்க்க முடியவில்லை - பாரில் இதன்
பாண்மை புரியவில்லை

கண்ணனைக் கண்ட பின்பே - என்
வாழ்வில்
கனக்கவே மாற்றம் கண்டேன்
மண்ணிலே தோன்றியதன் - மாட்சிமை
மனதினில் விரியக் கண்டேன்
எண்ணிய நல்ல தெல்லாம் -
எளிமையாய்
இனிதாக முடியக் கண்டேன்
அண்ணலின் அருள்மழைதான் -
மனதில்
ஆறாய்ப் பெருகக் கண்டேன்

# உலக விசித்திரம்

*கோழி கூவும் போதுதான்*
*உலகம் விடிகிறதா?*
*உலகம் விடிகிறபோதுதான்*
*கோழி கூவுகிறதா?*

*முட்டைக்குள் இருந்துதான்*
*குஞ்சு வந்தது*
*குஞ்சு தாயான போதுதான்*
*முட்டை வந்தது*
*முட்டை இல்லாதுபோனால்*
*குஞ்சு இல்லை*
*குஞ்சு இல்லாதுபோனால்*
*முட்டையும் இல்லை*

*போட்ட விதைதான்*
*முளைக்குமென்பார்*
*முளைத்த மரம்தான்*
*விதையைத் தரும்*
*விதையை விதைக்காமல்*
*மரம் வராது*
*மரம் இல்லையென்றால்*
*விதையும் இல்லை*

# நல்லதே எண்ணுவம்
# நல்லதே செய்குவம்

குறைவிலா மனிதரை காண்பது எளிதிலை
குறைகளை உணர்பவர்,
குணமதில் உயருவர்
துன்பமும் துயரமும் தொடர்தரின் சகிக்கலாம்
அன்பிலாமனத்துடன் அறிவுடைபெரியவர்
பண்பிலா நடத்தையும் பகர் இழிசொற்களும்
நல்லவர் மனத்தினை நலிவுறச் செய்திடும்
முள்ளினால் கிழித்தற்போல்
முறுகிடச் செய்திடும்
அத்தகை நிலையது ஆகிடுமாம் எனில்
அதைவிட துயர் நிலை வேறிலை
என்பன்யான்
பிறப்பதும் இறப்பதும் பெரிதிலை எவருக்கும்
நிகழ்வதுதான் இது
ஏன் இதில் வாதிடல்!
பாாத்திடில், எவருமே பிறந்திட்ட பின்னரும்
இறப்பதின் முன்னரும் இடைபட்டகாலத்தில்
என் செய்கின்றம் யாம் என்பதில் விளைவதே
இங்கெவர் நிலைப்பதும் இல்லாதுபோவதும்
இதனை நாம் உணர்ந்திடில்
இலை ஒரு சிக்கலும்
பாரதி வாழ்க்கையோர்
படிப்பினையாகுமாம்
தமிழிற்கும் தமிழர்க்கும்
தலைமகனாய் அவன்

*சாற்றியபணிகளால் சாகாதிருப்பன்காண்*
*நல்லது செய்திடில் நல்லதே விளைந்திடும்*
*அல்லது செய்திடின் அல்லதே விளைந்திடுமே*
*நல்லதே எண்ணுவம் நல்லதே செய்குவம்*
*அனைவர்க்கும்*
*பொதுவிதி ஆகிடும் இதுவென*
*அகிலமே உணர்ந்திட ஆக்குவம்*
*நண்பர்காள்!*

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

## "நூலாசிரியர் பற்றி...



**எஸ். பெருமாள்**

முன்னாள் ஆசிரியர்
ஈழநாடு
யாழ்ப்பாணம்
இலங்கை

எஸ்.பெருமாள் செய்திப் பத்திரிகைத்துறையில் 50 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்துள்ளார். 50களில் வீரகேசரியில் ஆசிரிய பீடத்தில் இணைந்து கொண்ட இவர் 60களில் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு நாளேடு பரிணமித்தபோது அதில் அமரர்கள் கே.பி.ஹரன். இராஜ அரியரத்தினம் மற்றும் எஸ்.எம்.கோபாலரத்தினம் முதலியோரோடு இணைந்து அப்பத்திரிகையின் உயர்வுக்கு உழைத்தார். 80களில் கொழும்பு அரசின் கூலிப் படையினராலும் பின்னர் போராளி குழுக்களாலும் அப்பத்திரிகை நிறுவனம் நிர்மூலமாக்கப்பட்டபோது இவர் ஏற்கனவே சேகரித்து வைத்திருந்த நூல்கள் ஆவணங்கள் மற்றும் இவர் எழுதி வைத்திருந்த கதை, கட்டுரை மற்றும் கவிதைகள் யாவும் அழிந்துபோயின. பின்னர் சிறிது காலம் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக பணியாற்றியதன் பின்னர் உதயன் பத்திரிகையில் இணைந்தார். இக்காலத்தில் அவ்வப்போது எழுதி சேமித்து வைத்திருந்த கவிதைகளையே இந்நூலாக வழங்கியுள்ளார் இப்பொழுது.

9 789557 206006



Printed by: Jeyasri Printers, 34,Brown Road, Jaffna